# 2. இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது? **(MDL - 19)**
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா ***இ) போப்*** ஈ) ஸ்பெயின்
2. யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?
   ***அ) ஹெர்மன் கோர்ட்ஸ்*** ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ
3. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?
   அ) ஆங்கிலேயர் ***ஆ) ஸ்பானியர்*** இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்
4. லத்தீன் அமெரிக்காவுடன் “அண்டை நாட்டுடன் நட்புறவு” எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
   ***அ) ரூஸ்வெல்ட்*** ஆ) ட்ரூமன் இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்
5. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை? **(PTA - 2)**
   அ) ஐரோப்பா ***ஆ) லத்தீன் அமெரிக்கா*** இ) இந்தியா ஈ) சீனா

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியர் ***பெர்டினன்ட் லாஸ்ஸல்லி***
2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் **ஜோசப் கோயபெல்ஸ்**
3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி ***1927***இல் நிறுவப்பட்டது.
4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை **கெஸ்டபோ** என அழைக்கப்பட்டது.
5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் ***1910***ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.
6. ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா ***27*** ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.
7. போயர்கள் **ஆப்பிரிக்கநேர்கள்** என்றும் அழைக்கப்பட்டனர்.

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. i) முதல் உலகப்போரின்போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபடவைப்பதே இத்தாலியின் முக்கியக்கடமையாக இருந்தது. **(PTA - 1)**
   ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.
   iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாளில் ஏற்பட்டது.
   iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966 இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.
   அ) i, ii ஆகியவை சரி ஆ) iii சரி
   இ) iii, iv ஆகியவை சரி ***ஈ) i, ii, iii ஆகியவை சரி***
2. **கூற்று** : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது. **(PTA - 5)**
   **காரணம்:** அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.
   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
   ***ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல***
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு
   ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

3. **கூற்று** : 1884-85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.
**காரணம்** : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.
அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
***ஆ) கூற்று சரி ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல***
இ) கூற்று காரணம் ஆகிய இரண்டுமே தவறு
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருத்தவில்லை.

## IV. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. டிரான்ஸ்வால் | - | அ) ஜெர்மனி |
| 2. டோங்கிங் | - | ஆ) ஹிட்லர் |
| 3. ஹின்டன்பர்க் **(MDL -19)** | - | இ) இத்தாலி |
| 4. மூன்றாம் ரெய்க் | - | ஈ) தங்கம் |
| 5. மாட்டியோட்டி **(PTA -2)** | - | உ) கொரில்லா நடவடிக்கைகள் |

| விடைகள்: | 1 - ஈ | 2 - உ | 3 - அ | 4 - ஆ | 5 - இ |
|---|---|---|---|---|---|

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. இந்தோ - சீனாவில் நடைபெற்ற "வெள்ளை பயங்கரம்" குறித்து நீங்கள் அறிந்ததென்ன?(AUG-22, PTA -6)**
- ♣ வியட்நாமில் புரட்சிக்காரர்கள், விவசாயிகள், பொதுவுடமைவாதிகள் மீது பிரெஞ்சுகாரர்கள் நடத்திய கொடூர தாக்குதலே வெள்ளை பயங்கரவாதம் ஆகும்.
- ♣ ஆயிரக்கணக்கான புரட்சியாளர்கள் கொல்லப்பட்டனர்.

**2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.**
- ♣ 1929 பொருளாதார பெருமந்தம் ஆங்கிலேயர்களின் வியாபரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.
- ♣ பெருமந்த பாதிப்பு தன்மேல் விழாமல் இருக்க காலனிய நாடுகளின் மீது திணிப்பதற்காக இங்கிலாந்தால் ஒட்டோவோவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.
- ♣ இம்மாநாட்டின் மூலம் இங்கிலாந்து வியாபாரத்திற்கு முன்னுரிமை பெறப்பட்டது.

**3. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?**
- ♣ 1922 இத்தாலியின் அரசவையில் பெரும் சிக்கல் ஏற்பட்டது. முசோலினி இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு ரோமாபுரி நோக்கி பெரும்படையுடன் அணிவகுப்பை நடத்தினார்.
- ♣ வியந்து போன இத்தாலிய மன்னர் மூன்றாம் விக்டர் இம்மானுவேல் முசோலினையை ஆட்சியமைக்க வரவேற்றார்.
- ♣ ரோமாபுரி அணிவகுப்பின் மூலம் கத்தியின்றி இரத்தமின்றி முசோலினி இத்தாலியின் தலைமையை பெற்றார்.

**4. 1884-85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.**
- ♣ 1884-1885 ஆண்டுகளில் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டில் காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.
- ♣ ஆனால் ஆங்கிலேயருக்கும் தென்னாப்பிரிக்க போயர்களுக்கும் இடையே நடைபெற்றப் போர் இத்தீர்மானத்திற்கு எதிரான செயலாகும்.

**5. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?**
- ♣ பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரணஅடியைக் கொடுத்தது. **(MAY-2022, SEP-2021)**
- ♣ வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.
- ♣ விவசாய விளைபொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்தவேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.

**6. "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவுபட விளக்குக.** **(PTA - 2)**
- ♣ அமெரிக்காவில் தொலைதூர நாடுகளுக்கு பொருளாதார உதவி செய்தல்.
- ♣ பின்னர் ஆதிக்கம் செலுத்தி அடிமைப்படுத்துதல்.


WAY TO SUCCESS

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

- 1919 ஆம் ஆண்டில் ஏழு நபர் கொண்ட குழுவுடன் நாசிச கட்சி உருவானது. அவர்களில் ஹிட்லர் ஒருவராக இருந்தார்.
- முதல் உலகப்போரில் பவேரியாவின் படையில் பணியாற்றினார். அவரின் எழுச்சி மிக்க உரை வீரர்களுக்கு உற்சாகமூட்டியது.
- தேசிய புரட்சியில் கலந்து கொண்டு சிறை சென்றார். சிறையில் அவர் எழுதிய மெயின்காம்ப் பின்நாளில் நாசிசக்கட்சியின் பொது நூலாக மாறியது.
- 1932 தேர்தலில் ஹிட்லருக்கு முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் ஹிட்லருக்கு ஆதரிக்கத்தொடங்கினர்.
- இதன் மூலம் ஹிட்லர் தவறான வழியில் அதிகாரத்தை பயன்படுத்தினார்.

**2. உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.**

- 1919இல் இந்திய அரசுச் சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது.
- 1929ஆம் ஆண்டுப் பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கிலேயே வணிக வர்த்தக நடவடிக்கைகளுக்கு பெரும் சேதத்தை உண்டாக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இந்திய அரசு பின்பற்றிய அந்நியச் செலாவணி மாற்றுக் கொள்கை காலனி அரசுக்கும் மக்களுக்குமிடையே பதற்றமான நிலையை ஏற்படுத்தியது.
- பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலையை பாதியாகக் குறைத்தது.
- விவசாய விளைபொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்தவேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.
- 1935ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம். உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.

**3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும். (PTA - 1)**

- 1910ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமானது.
- ஆங்கிலேயர்களை கொண்ட யூனியனிஸ்ட் கட்சியும், ஆப்பிரிக்க போயர்களை கொண்ட தென் ஆப்பிரிக்க கட்சியும் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.
- 1920 ஆம் ஆண்டுத்தேர்தலில் தென் ஆப்பிரிக்க கட்சியின் ஸ்மட்ஸ் என்பவர் வெற்றி பெற்றார்.
- கல்வி வழங்குவதில் வெள்ளையர்களுக்கும், கறுப்பின மக்களுக்கும் பாகுபாடு பார்க்கப்பட்டது.
- இதன் மூலம் கறுப்பின மக்களுக்கெதிரான இனவெறி தலைதூக்க ஆரம்பித்தது.
- 1924 இல் கறுப்பின மக்கள் போராட்டத்தில் ஈடுபடுதல், தொழிற்சங்கத்தில் சேர தடை என சட்டம் இயற்றப்பட்டது.
- கருப்பின மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

WAY TO SUCCESS